*சைவநெறி தரம் 10*

| வாரம் | தரம் | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|---|
| *1* | *09* | *2.0* | *2.1* | நாலாயிரம் திவ்விய பிரபந்தம் | • நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள் என்றால் என்ன என்பதை அறிவார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் வைப்பு முறையையும் அதன் ஆசிரியர்களையும் அறிந்து அதற்கு மதிப்பளிப்பார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் பொருள் மரபின் அறிமுகத்தினைப் பெறுவார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் வெளிப்படுத்தும் புராண இதிகாச கதைகளை இனங்காண்பார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் சிறப்பு பற்றிய விடயங்களைத் தேடியறிவார்.<br>• நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களின் பக்தி வெளிப்பாடுகளை இனங்காண்பார் | *02* |
| *2* | | *3.0* | *3.1* | திருமுறைப்பாடல்கள் | • தேவாரங்களினதும் தோத்திரப் பாடல்களினதும் சிறப்பினை அறிவார்.<br>• தேவாரங்களையும் தோத்திரங்களையும் மனனம் செய்து பண்ணோடும் பக்தியோடும் பாடுவர்.<br>• எழுத்துப் பிழையின்றி வரிக்கிரமமாகத் தேவாரத்தினையும் தோத்திரத்தினையும் எழுதுவார்.<br>• பஞ்சபுராணம் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பார்.<br>• பாடல்களைப் பண்ணோடு பாடுவார்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களைப் பாடுவார் | *02* |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | • பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வார்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும் என்பதை விவரிப்பார்.<br>• பஞ்ச புராணப் பாடல்களின் பொருள் விளக்கத்தையும் அவைகள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தையும் அறிந்து விபரிப்பார். | |
| 3. | | 4.0 | 4.1 | தலயாத்திரையும் ஆன்மீகமும் | • தலயாத்திரை சைவமக்கள் வாழ்வில் பெறும் இடத்தை அறிந்து கொள்ள விரும்புவர்களுக்கு விளக்கிக் கூறுவார்<br>• தலயாத்திரையின் ஆன்மீக முக்கியத்துவத்தை விளங்கிக் கூறுவார்<br>• தலயாத்திரை மூலம் இறைபக்தியும் ஆன்மீக விருத்தியும் ஏற்படும் என்பதை விபரிப்பார்<br>• தலயாத்திரை மூலம் வளர்க்கப்படும் விழுமியங்களை தனி வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து நடப்பார் | 02 |
| 4. | | 5.0 | 5.2 | அருணாசல தேசிகர் | • ஈழத்தின் சைவப் பெரியார்களை அறிவார்<br>• ஈழத்தின் சைவப் பெரியார்கள் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளைத் தொகுப்பார்<br>• ஈழத்தின் சைவப் பெரியார்களின் பணிகளை அறிந்து தாமும் சமயத்திற்கு ஆற்றவேண்டிய பணிகளை அறிந்து செயற்படுவார்<br>• சைவசமயத்தின் வளர்ச்சிக்கு சைவர்கள் ஆகிய நாம் செய்யவேண்டிய பணிகளை அருணாசல தேசிகரின் வாழ்க்கை வரலாறு மூலம் அறிந்து எடுத்துரைப்பார் | 02 |
| 6. | | 7.0 | 7.1 | நாட்டார் வழிபாடு | • நாட்டார் வழிபாட்டின் வரைவிலக்கணத்தைக் கூறுவார்<br>• நாட்டார் வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவார். | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | • பெரிய தம்பிரான், காத்தவராயன், ஐயனார் வழிபாடு நடைபெறும் இடங்களை அடையாளப்படுத்துவார்.<br>• பெரிய தம்பிரான், காத்தவராயன், ஐயனார் சடங்கின் போது நிகழ்த்தப்படும் கதைகள் எவையெனக் குறிப்பிடுவார்.<br>• சடங்கு முறைகளினூடாக கிராமிய நம்பிக்கை, பண்பாடுகளைப் பேணிக்காக்க முன்வருவார். | |
| 6. | | 8.0 | 8.1 | ஈழத்து சைவசமய வளர்ச்சி | • ஈழத்தின் வரலாற்றுத் தொன்மையை அறிய உதவும் ஆதாரங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• ஈழத்துச் சைவ மரபின் தொன்மை,வரலாற்றை அதனைப் போற்றும் மனப்பாங்கினைப் பெறுவார்.<br>• ஈழத்தின் சைவசமய வளர்ச்சி அனுராதபுர, பொலநறுவைக் காலங்களில் காணப்பட்டவாற்றை எடுத்துரைப்பார்.<br>• ஈழத்தின் தொன்மை வரலாற்யையும் தொன்மையையும் தேடி அறிந்து பாதுகாக்க முன்வருவார். | 02 |
| 8. | | 9.0 | 9.1 | ஈழத்து சைவ ஆலயங்கள் | • கண்டி கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம் பற்றி அறிந்து தலயாத்திரை மேற்கொள்வார்<br>• பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் பற்றி அறிந்துஅதன் சிறப்புக்களைப் போற்றுவார்<br>• மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் பற்றியவரலாற்றுக கதைகளைத் தேடிப் பெறுவார்<br>• போரைதீவு காளியம்மன் ஆலய சிறப்புக்களை அறிந்து அதனைப் போற்றுவார்<br>• தாந்தாமலை முருகன் ஆலயம் மற்றும் தொண்டமானாறு சந்நதி முருகன் ஆலயம் பற்றிய செய்திகளையும் சிறப்புக்களையும் போற்றுவார்<br>• மட்டக்களப்பு திமிலைதீவு மகாவிஷ்ணு ஆலயம் பற்றிய செய்திகளையும் சிறப்புக்களையும் போற்றுவார் | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | • யாழ்ப்பாணம் பெருமாள் ஆலய சிறப்புக்களை அறிந்து அதனைப் போற்றுவார் | |
| 9. | 10 | 1.0 | 1.5 | வாழ்வியல் சடங்குகள்<br>(திருமணச் சடங்கு) | • திருமணக் கிரியையின் அவசியத்தை உணர்ந்து மதிப்பளிப்பர்.<br>▪ பல்வேறு பிரதேசங்களில் காணப்படும் திருமணக்கிரியை முறைகளைத் தேடியறிவர்.மனித வாழ்க்கையில் திருமணத்தின் அவசியத்தைக் குறிப்பிடுவர<br>▪ உறவினர்களின் திருமணக்கிரியைகளின் போது அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு முனவருவர்.<br>▪ திருமணத்தின் போது ஆசாரியரால் மேற்கொள்ளப்படும் கருமங்களை நிரற்படுத்துவர். | |
| 10. | | 2.0 | 2.1 | திருமுறைப்பாடல்கள் | • பஞ்ச புராணங்கள் பாடும் போது ஆரம்பத்திலும் இறுதியிலும் திருச்சிற்றம்பலம் பாடும் வழக்கத்தை கடைப்பிடிப்பர்<br>• பாடல்களை பண்ணோடு பாடுவர்<br>• வரிக்கிரமமாக, பிழைகளின்றி இறைசிந்தனையுடன் தோத்திரப்பாடல்களை பாடுவர்<br>• பஞ்ச புராணத்தில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பெரியபுராணம் என்பன அடங்கும் என்பதை அறிந்து கொள்வர்.<br>• முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்களாகும் என்பதை விவரிப்பர்.<br>• திருவாசகம் மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்டது என்பதனை அறிவர்.<br>• திருவாசகம் எட்டாம் திருமுறையில் அடங்கும் என்பதனைக் கூறுவர்.<br>• திருவாசகப் பாடலை பொருள் உணர்ந்து பக்தியோடும் பண்ணோடும் பாடுவர்.<br>• திருவிசைப்பா, திருமந்திரம், பதினோராம் திருமுறை என்பவற்றை மனனம் செய்து பக்தியோடும் பண்ணோடும் பாடுவர். | |
| 11. | | | 2.2 | வேதங்களும் ஆகமங்களும் | • வேதம் என்பதன் பொருளைக் கூறுவர்<br>▪ வேதகாலத் தெய்வங்களை அறிந்து போற்றுவர்.<br>▪ வேதங்களின் சமய, சமூக, வழிபாட்டு | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | அம்சங்களைப் பிறருக்கு எடுத்துரைப்பர். | |
| 12. | | | 2.3 | திருக்கூட்டச் சிறப்பு | • பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் என்பதனை அறிவர்.<br>• பெரியபுராணத்திற்கு திருத்தொண்டர் புராணம் என்ற பெயர் உண்டு என்பதனைக் குறிப்பிடுவர்.<br>• சிவனடியார் தோற்றப்பொலிவினைக் கூறுவர்.<br>• சிவனடியார் பெருமைகளை எடுத்துககூறுவர்.<br>• சிவனடியாரை சிவன் எனப் போற்றி மதிப்பளிப்பர். | |
| 13. | | 4.0 | 4.1 | மகோற்வக் கிரியைகள் | • ஆலயக் கிரியைகளின் முப்பெரும் பிரிவுகளையும் குறிப்பிடுவர்.<br>• நைமித்திய கிரியைகள் ஐந்தினைக் குறிப்பிடுவர்.<br>• மகோற்சவம் என்பதன் பொருளை எழுதிக்காட்டுவர். | |
| 14. | | 5.0 | 5.2 | சந்தான குரவர்கள் | • சந்தானகுரவர்கள் என்பதன் விளக்கத்தை கூறுவர்.<br>▪ அகச்சந்தானகுரவர்கள், புறச்சந்தானக்குரவர்கள் என பட்டியல்படுத்திக் காட்டுவர்.<br>▪ சந்தானகுரவர் குருசீட உறவு முறைகளைக் கூறுவர்<br>▪ புறச்சந்தானக்குரவர் இயற்றிய நூல்களைப்பட்டியற்படுத்துவர்<br>▪ சந்தானகுரவர்களின் பணிகளை அறிந்து அவர்களுக்கு மதிப்பளிப்பர். | |
| 15. | | 6.0 | 6.3 | குருலிங்க சங்கம வழிபாடு | • இறைவனை அடைவதற்கான மார்க்கங்கள் மூன்றைக் குறிப்பிடுவர்.<br>• குரு, லிங்க, சங்கம வழிபாட்டின் மூலம் முத்தியடைந்த நாயன்மார்களின் பெயர்களை அட்டவணைப்படுத்துவர்.<br>• குரு வழிபாட்டின் முக்கியத்துவத்தையுணர்ந்து குரு பூசைத்தினங்களில் கூட்டாகச் செயற்படுவர். | |
| 16. | | 7.0 | 7.1 | நாட்டார் வழிபாடு | • ஆகமம் சாரா வழிபாட்டின் வரைவிலக் கணத்தைக் கூறுவர்<br>• ஆகமம் சாரா வழிபாடு இன்று வரை நிலைத்து நிற்பதற்கான காரணத்தை ஏற்றுக் கொள்ளுவர்.<br>• திரௌபதியம்மன்,வைரவர்வழிபாடு நடைபெறும் இடங்கள் மூன்றினைக் கூறுவர்.<br>• திரௌபதியம்மன், வைரவர் சடங்கின் போது நிகழ்த்தப்படும் கதைகள் எவையெனக் குறிப்பிடுவர்.<br>• சடங்கு முறைகளினூடாக கிராமியப் பண்பாடுகளை பேணிக்காக்க முன்வருவர். | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17. | | | 7.2 | நாட்டார்கலைகள் | • நாட்டார்க் கலையின் சிறப்பியல்புகளைத் தேடித்தொகுப்பர்<br>• கூத்தின் வகைகளைக் பட்டியற்படுத்துவர்.<br>• நாட்டார் கலைகள் இனங்கண்டு அவற்றைத் தம் வாழ்வில் மேற்கொள்வர். | |
| 18. | | 8.0 | 8.2 | ஈழத்து ஆலயங்கள் | • களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் பற்றி அறிந்து தலயாத்திரை மேற்கொள்வர்<br>• கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பற்றி அறிந்து அதன் சிறப்புக்களை போற்றுவர்<br>• நல்லூர் கந்தசுவாமி ஆலயம் பற்றிய வரலாற்றுக் கதைகளை தேடிப் பெறுவர்<br>• நயினாதீவு நாகபூசணியம்மன் ஆலய சிறப்புக்களை அறிந்து தலயாத்திரை மேற்கொள்வர் அதனைப் போற்றுவர்<br>• புன்னைச்சோலை பத்ரகாளியம்மன் ஆலயம் பற்றிய செய்திகளையும் சிறப்புக்களையும் போற்றுவர் | |
| 19. | | | 8.3 | பிள்ளையார் கதை | • ஈழத்தில் தோன்றிய சைவப் பிரபந்தங்களில் பிள்ளையார் கதையின் சிறப்பம்சங்களைப் பட்டியலிடுவர்.<br>• விநாயகர் ச ̃டி விரதத்தை அனு ̃டிப்பதால் கிடைக்கும் பயன்களை அறிந்து தாமும் அனு ̃டிக்க முன்வருவர்.<br>• பிள்ளையார் கதையில் தாம் படித்துச் சுவைத்த பகுதியை பிறருக்கு எடுத்துக் கூறுவர்.<br>• பிள்ளையார் கதையினை பிள்ளையார் விரதம் அனு ̃டிக்கும் காலத்தில் படனம் செய்வர். | |
| 20. | | | 8.3 | சைவ வித்தியா விருத்திச் சங்கம் | • சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஆற்றிய சமயப்பணிகள், கல்விப் பணிகள் இரண்டினைக் குறிப்பிடுவர்.<br>• சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளை பட்டியற்படுத்துவர்.<br>• சமயத்தினூடாக சமயப்பணிகள் ஆற்ற வேண்டும் என்ற மனப் பாங்கைப் பெற்றுக் கொள்வர். | |